වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயற்திறன் அறிக்கை
ANNUAL PERFORMANCE REPORT

2024

වෙළුම - III

தொகுதி - III

Volume - III

කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

වාරිමාර්ග අංශය / நீர்ப்பாசன பிரிவு / **Irrigation Division**

தலைப்பு - 118

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசன பிரிவு

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

உள்ளடக்கம்

செலவினத் தலைப்பு இல 118
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு - நீர்ப்பாசன பிரிவு

அத்தியாயம் 01	*நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு*	*01*
அத்தியாயம் 02	*முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்*	*07*
அத்தியாயம் 03	*வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை*	*90*
அத்தியாயம் 04	*செயலாற்றுகை சுட்டிகள்*	*95*
அத்தியாயம் 05	*பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை*	*96*
அத்தியாயம் 06	*மனித வள விபரம்*	*101*
அத்தியாயம் 07	*இணக்க அறிக்கை*	*103*

பின்னிணைப்பு

பின்னிணைப்பு I	*நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்*
பின்னிணைப்பு II	*செயற்படும் நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்*
பின்னிணைப்பு III	*கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (நீர்ப்பாசனப் அமைச்சு)*

01 அத்தியாயம் - நிறுவன ரீதியான தோற்ற வடிவம் / செயற்படுத்துகை சுருக்கம்

1.1. அறிமுகம்

நீர்ப்பாசன அமைச்சு பிரதானமான செயற்படுத்துகை அமைச்சாக செயற்பட்ட வண்ணம் இலங்கை சன ரயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2403/53 மற்றும் 2024 செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டு கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு நிலை நாட்டப்பட்டது. பிற்பாடு, 2024 நவம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலக்கம் 2412/08 ஐ உடைய அதி விசேட வர்த்தமானியின் மூலம் அது கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சாக மீண்டும் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

அதனடிப்படையில், முன்பிருந்த நீர்ப்பாசன அமைச்சு இன்றளவில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழான நீர்ப்பாசனப் பிரிவாக இலங்கையிலுள்ள நீர் வளங்கள் விருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான மிக முக்கியமான செயற் பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

பயிர்ச் செய்கைக்கான நீரை விநியோகிப்பதன் வாயிலாக நாட்டின் விவசாயக் குடி மக்களது வாழ்க்கைத் தராதார நிலைகளை மேலுயர்த்தும் பொருட்டு பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீரை விநியோகித்தல், அதற்கு அப்பாற்பட்டதாக குடிநீர், கைத்தொழில் மற்றும் மின் உற்பத்தி போன்ற பல் தரப்பு நோக்கங்களின் ஊடாக நீர் வளங்களின் மேம்பாடு மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக தமக்குரிய பணிகளை விரிவாக முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நீர்ப்பாசனப் பிரிவு, தமது பணி நோக்கங்களை வினைத் திறன் மிக்கதாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்த வண்ணமுள்ளது.

அதனடிப்படையில் நடுத்தர மற்றும் பாரியளவான நீர்ப்பாசன வலயங்களை அண்டிய ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ பிரவேசிப்பின் ஊடாக விவசாயக் குடி மக்களை வலுவூட்டுவதும், நீர் வளங்கள் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக அதன் அளவியல் ரீதியான மற்றும் தரமுயர்ந்த நிலையை பேணும் பொருட்டும் இப் பிரிவின் ஊடாக பல்வேறு நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன.

1.2. *நிறுவனத்தின் தூரநோக்கு, குறிக்கோள்கள், பணிக்கூற்று*

1.2.1. *தூரநோக்கு*

"வினைத்திறனான நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் செழிப்பான இலங்கையை உருவாக்குதல்"

1.2.2. *பணிக்கூற்று*

நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் பல் நோக்குத் தேவைகளை நிவர்த்தி செய்த வண்ணம் குடிகளினதும், சூழலினதும் நிலைப்பாட்டை உறுதி செய்தல்

1.2.3. *குறிக்கோள்கள்*

i. நாட்டின் அனைத்து வகையான நீர்ப் பயன்பாடு மற்றும் வலுச் சக்தி தோற்றுவாய்க்குத் தேவையான நீர் வளத்தை விருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்துதல்.

ii. காணி மற்றும் நீர் பயன்பாட்டை மேம்படுத்துதல்.

iii. ஆற்றுப் படுக்கைகளையும், நீர்த் தோற்றுவாய்களையும் பாதுகாப்பதன் மூலம் நீரின் தரத் தன்மையையும், பேண் தகு நிலையையும் பாதுகாத்தல்.

iv. இலங்கயின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு தேவையான பாசன நீர் மற்றும் விவசாயஞ் சார் மதியுறை சேவை வசதிகளை வழங்குதல்.

v. இலங்கையர் அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு மிக்க குடியியல் நீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் தேவையான வசதிகளை வழங்குதல்.

vi. சுற்றுச் சூழல் சம நிலைக்கும், மேம்பாட்டுக்கும் தேவையான நீர் வசதிகளை வழங்குதல்.

vii. நீர்ப்பாசனத் தொகுதிகளுடன் தொடர்புடைய விவசாயக் குடி மக்களினது வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதன் ஊடாக விவசாயத் துறையின் பேண்தகு நிலையை உறுதிப்படுத்துதல்.

viii. கைத்தொழில் துறை, சுற்றுலாத் துறை போன்ற சேவை பிரிவுகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்தல்.

ix. இலங்கையில் நிலக் கீழ் நீர் வளங்கள் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்.

x. மகாவலி விசேட பொருளாதார ஆளுகைப் பிரதேசத்தின் ஊடாக தேசிய உணவுற்பத்தி செயற்பாடு தொடர்பில் முனைப்பழிப்புள்ள பங்களிப்பை வழங்குதல்.

1.3. *பிரதான செயற்பாடுகள்*

i. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களின் விடயப் பரப்புகளுடன் தொடர்புடைய கொள்கை உறுவாக்கம், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

ii. அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகின்ற பொது மக்களுக்கான சேவைகளை வினைத் திறன் மிக்கதாகவும், பொது மக்களது பங்களிப்புடனும் பெற்றுக் கொடுத்தல்.

iii. அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகின்ற பொது மக்களுக்கான சேவைகளை வினைத் திறன் மிக்கதாகவும், பொது மக்களது பங்களிப்புடனும் பெற்றுக் கொடுத்தல்.

iv. நீர் வளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளின் விருத்தி

v. முன்னெடுப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளும் உள்ளடங்களாக நீர்ப்பாசனத் தொகுதிகளையும், ஆற்றுப் படுக்கைகளையும் பாதுகாத்தல்.

vi. அணைக்கட்டுப் பாதுகாப்பு நெறி முறைகளை உறுவமைத்தல்.

vii. நீர்த் தோற்றுவாய்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை பேணுதல் மற்றும் பாதுகாத்தல்

viii. அணைக்கட்டுப் பாதுகாப்பு நெறி முறைகளை உறுவமைத்தல்.

ix. பல் வகை தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான போதியளவான நீரை ஒதுக்கிடும் பொருட்டு தொழில்நுட்ப வழிகாட்டலையும், அளவுகோல்களையும் தயாரித்தல்.

x. நீர்த் தோற்றுவாய்கள் மற்றும் தொடர்புடைய சுற்றாடல் மாசாக்கத்தை தடுப்பதற்கும், நீரின் தர நிலையை உறுதிப்படுத்தும் பொருட்டும் உபாய வழி நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்.

xi. நிலத்தினுள் உவர் நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்

xii. கழிவு நீர் மற்றும் வெள்ளப் பெருக்கு பாதுகாப்பு

xiii. பொறியியல் சார் மதியுறை சேவைகளை வழங்குதல்.

xiv. அரச பிரிவிற்குறிய பிரதானமான நிர்மாணிப்பு சேவை வழங்குநராக தராதர மிக்க நிர்மாணிப்புப் பணிகளில் ஈடுபடுதல்.

xv. நீர்ப்பாசனத் தொகுதிகளின் நிறுவன ரீதியான அபிவிருத்தி மற்றும் வினைத் திறனை மேம்படுத்துகை.

xvi. நிலக் கீழ் நீர் மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம்.

xvii. மழை நீர் சேகரிப்பு மழை நீர் சேகரிப்பை விருத்தி செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

xviii. தேசிய மின் வழங்கல் செயற்பாட்டின் பிரதானமான புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி வழங்குநராக மகாவலி நீர்த்தேக்கத் தொகுதிகளை முகாமைத்துவப்படுத்துதல்.

1.4. நிறுவன விளக்கப்படம்



*Director General (SLAgs - Special) - இந்தப் பதவி ஒப்புதலுக்காக மீண்டும்

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

- நீர்ப்பாசன திணைக்களம்

1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியங்கள்

- நீர்ப்பாசனத் திணைக்களம் (ID)
- இலங்கை மகாவலி அதிகார சபை (MASL)
- நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு (IMD)
- மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB)
- இலங்கை பொறியியல் பேரவை (CESL)
- இலங்கை பொறியியல் சபை (ECSL)
- மகாவலி மதியுறை பணியகம் (MCB)

1.7. வெளி நாட்டு நிதியங்கள் பெறப்படுகின்ற கருத்திட்டங்களின் தகவல்கள்

அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம் (ரூபா. மில்லியன்)	ஈ) கருத்திட்ட காலப்பகுதி
மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சி (MWSIP)	ADB / GoSL	160,356.00 (Revised) (USD 976 Mn) *Assured Loan amount by ADB - (USD 539.00 Mn)	2015 - 2025
உமா ஓய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்	EDB of Iran / GoSL	99,100.00 (Revised) USD 514.06 Mn (Headworks - 89,748.00) (USD 50 - EDB of Iran)	2010 - 2025
மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்க கருத்திட்டம்	CDB, SFD, KFAED, OFID, GoSL	120,700.00 (USD 770.41 Mn)	2007 - 2025
கால நிலை தாக்கங்களை தணிக்கும் பல கட்ட நிகழ்ச்சித் திட்டம் (CResMPA)	WB, IBRD	26.970.00 (USD 93 Mn)	2021 - 2026
ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP)	WB	20,308.70 (USD 45.03Mn)	2021 - 2026
நீர் முகாமைத்துவத்துக்கான ஒருங்கிணைந்த பிரவேசிப்பின் ஊடாக கால நிலை ஏற்றத் தாழ்வுகளை முகாமைத்துவப்படுத்துதல் (வெவ்கம் புபுதுவ - CRIWMP)	Green Climate Fund & GoSL	12,940.00 USD 52.08 Mn (USD 1 = Rs. 250.00)	2017 - 2024

அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம் (ரூபா. மில்லியன்)	ஈ) கருத்திட்ட காலப்பகுதி
இலங்கையில் நகல்ஸ் மலைத் தொடரின் நீரேந்து பிரதேசத்தில் அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய ஆற்றுப் படுக்கைகளில், நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் தாழ் ஆற்றுப் படுக்கைகளில் குடியேறியுள்ள விவசாயிகளினதும், விவசாயக் குடி மக்களினதும் காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறனை வலுவூட்டுதல் - (GCF நகல்ஸ் கருத்திட்டம்)	பசுமைக் காலநிலை நிதியம் /இலங்கை அரசு	14,692.00 (USD 48.975 Mn)	2023 - 2029

2 ஆவது அத்தியாயம் - விருத்தி மற்றும் எதிர்வரும் நோக்கு

2.1 விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்வரும் இலக்குகள்

2.1.1. விசேட விடயங்கள்மற்றும் விருத்தி

இலங்கையின் நீர்ப்பாசனக் கைத்தொழிலை கட்டியெழுப்பும் பொருட்டு நீர் வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக மிகப் பெரும் பங்களிப்பு வழங்கப்படுகின்ற நீர்ப்பாசனப் பிரிவு, சர்வதேசத்தின் பிரதான உணவான "சோறு" வழங்கும் பொருட்டான நெற் பயிர்ச் செய்கை தொடர்பாக நீரை விநியோகித்தல் உட்பட இலங்கையின் அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட தேவைகளுக்கு நீர் விநியோகிக்கப்படுகின்றது.

அவ்வாறே, நாடு பூராகவும் பரம்பியுள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளினதும் செயற்பாட்டுப் பராமரிப்புகள் மற்றும் பாதுகாப்புச் செயன் முறைகளுக்கு மேலதிகமாக நீர்ப்பாசனத் தொகுதிகளின் விருத்திக்கும், அதற்கு அப்பாற்பட்டதாக நாட்டின் குடி நீர்த் தேவையை பூர்த்தி செய்வதும், மின் வலு உற்பத்திக்குத் தேவையான நீரை விநியோகிப்பதும் நீர்ப்பாசனப் பிரிவின் முதனிலை பணிகளாகக் காணப்படுகின்றன.

நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்ட இலங்கையின் பிரதானமான நீர்ப்பாசனக் கருத்திட்டமான உமா ஒய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இதன் வாயிலாக நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 120 மெகா வொட் கொள்திறனுள்ள மின் வலு தேசிய மின் வலுத் தொகுதிக்கு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டாலும், குறைகளை சரி செய்யும் காலப் பகுதியில் எஞ்சிய பணிகள் மற்றும் குறைகளை சரி செய்யும் பணிகளையும் ஒப்பந்தக்காரர் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கருத்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மூடப்பட்டு அதன் அனைத்துப் பணிகளும் நீர்ப்பாசனப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருப்பதுடன், மட்டுப்படுத்தப்பட்ட பணிக் குழுவுடன் இக் கருத்திட்டத்தை செயற்படுத்துகையில் அமைச்சு பல்வேறு இன்னல்களுக்கு முகங் கொடுத்துள்ளது.

வெள்ளப் பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்களுடன் தொடர்புடையதாக உலகலாவிய அபாய நிலைக்கு உள்ளாகியுள்ள நாடுகளிடையே இலங்கை உள்ளடங்கியிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் வெள்ளப் பெருக்கு, மண் சரிவு போன்ற அனர்த்தங்கள் தொடர்பாக வளி மண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி இயக்கம் போன்ற நிறுவனங்களின் அனர்த்த முன் எச்சரிக்கைத் தொகுதிகளை மேம்படுத்தி தொடர்புடைய எதிர்வு கூறல்கள் சரியாக முன் வைக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டதாக வானிலையினாலான தாக்கங்களை குறைக்கும் பல கட்ட நிகழ்ச்சித் திட்டம் (CresMPA) உலக வங்கியின் நிதியுதவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இன்றளவில் அந் நிறுவனங்களுக்கு உரித்தான செயற் பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

மேலும் இதன் கீழ் களனி ஆற்றின் வெள்ளப் பெருக்கு நிலையை குறைக்கும் முகமாக மேல் நீரேந்துப் பிரதேசத்தில் வீ ஒய நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதுடன் தொடர்புடைய திட்டங்களை தயாரிக்கும் பொருட்டு மதியுறை நிறுவனமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்வாறே, அம்பதலே உவர் நீர்த் தடுப்பானுடன் தொடர்புடைய திட்டங்களின் பரிசீலனையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் கீழான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற 25 மாவட்டங்களுக்கும் உரித்தான சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் மறு சீரமைப்புப் பணிகள் மேலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

நடுத்தர மற்றும் பாரியளவான நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் முதல் நிலைப் பணிகள் மற்றும் கால்வாய்த் தொகுதிகளின் மறு சீரமைப்புப் பணிகள், உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி மற்றும் மேல் மகாவலி நீரேந்துப் பிரதேசத்தை பாதுகாக்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயற்படுத்துகையை நோக்கமாகக் கொண்ட ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டமும் (IWWRMP) அதன் கீழான இலக்குகளை எய்தப் பெறும் பொருட்டு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் (MWSIP) கீழ் இடக் கரை மற்றும் வலக் கரை கால்வாய்கள் தொடர்பாக நீர் கட்டுப்பாட்டு உபகரணங்களின் பொருத்துகை உட்பட மினிபே அணைக்கட்டை உயர்த்தும் செயற் பணிகள் நிறைவடைந்துள்ளன. நெபடகஹவத்தவிலிருந்து பிரவேசிப்புச் சுரங்கம் வரையான தலைமைக் கால்வாயின் நிர்மாணிப்புகள் இறுதிக் கட்டத்தில் நிலவுவதுடன், களு கங்கை மற்றும் மொரகஹகந்தவை இணைக்கும் 8.8 கிலோ மீற்றர் நீளமான சுரங்கத்தின் விருத்தி 97% ஐ எட்டியுள்ளது. மினிபே வலக் கரை கால்வாயின் முதல் நிலை பணி விருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இப் பணிகளுக்கு நேரொத்ததாக மகாவலி தொகுதிகளில் பொருளாதார நெருக்கடி நிலையினால் அவதிப்படுகின்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேலுயர்த்தும் பொருட்டு பல்வேறு கருத்திட்டங்களும் செயற்பட்ட வண்ணமுள்ளன. அதன் கீழ் மகாவலி பீ, சீ, டீ, ஈ மற்றும் ஹுருலு வெவ வலயங்களிலுள்ள விவசாயிகளுக்கு 200 SMART விவசாயத் தொகுதிகளை கையளிப்பதற்கும், வலவ வலயமும் உள்ளடங்களாக மேற்குறித்த வலயங்களிலுள்ள 1927 விவசாயிகளுக்கு கோழித் தீவனங்கள் மற்றும் இனப்பெருக்க கோழிக் குஞ்சுகளும் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ உட் பிரவேசிப்பின் வாயிலாக இலங்கையின் உலர் வலயத்தில் சிறு காணி உரிமையுள்ள விவசாயிகளினது வானிலையினாலான தாக்கங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறனை விருத்தி செய்யும் கருத்திட்டம் எனப்படும் வெவ்கம் புபுதுவ கருத்திட்டம் (CRIWMP), 4 உள்ளடக்கங்களின் கீழ் செயற்பட்ட வண்ணமுள்ளன. குறிப்பாக கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளின் மேல் ஆறு மற்றும் கீழ் ஆறு ஆகியவற்றின் அபிவிருத்திப் பணிகளும் இன்றளவில் பெருமளவில் நிறைவடைந்துள்ளன. சுற்றுச் சூழல் உரிமம் மற்றும் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தும் முகமாக கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகள் தொடர்பாக பாதுகாப்புப் பிரதேசங்களின் எல்லைகளை திட்டமிடுதல், கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் நெருங்கிய கண்காணிப்புப் பணிகள் தொடர்பாகவும் விரிவான உலகலாவிய தரவுக்

களஞ்சியமொன்றை உறுவமைக்கும் செயற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. அவ்வாறே, விவசாய மேம்படுத்துகைகள், குடி நீர்த் தேவையை நிவர்த்தி செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பராமரிப்புப் பணிகள் மற்றும் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கக் கூடிய வண்ணம் மதியுறை நிகழ்ச்சிகளை செயற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

நகல்ஸ் மலைத் தொடரில் கவனத்துக்கு உள்ளாகியுள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர் வீழ்ச்சிகளை அண்டிய பிரதேசங்கள் மற்றும் தாழ் நீரேந்துப் பிரதேசத்தில் வசிக்கின்ற விவசாயிகள் மற்றும் பெருந் தோட்டக் குடி மக்களது வானிலையினாலான மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் திறனை மேலுயர்த்தும் (பசுமை காலநிலை நிதியம்) கருத்திட்டத்தின் கீழான கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்ப கட்டத்தின் கீழ் செயற்பட்ட வண்ணமுள்ளன.

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்படக் கூடிய முக்கியமான கருத்திட்டங்களின் விருத்தி தொடர்பான விபரங்களை கீழேயுள்ளவாறு சுருக்கிக் குறிக்கலாம்.

1. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (MWSIP)

<table>
<tr><td colspan="2">மதிப்பீட்டு பணத் தொகை</td><td>160,356.00 (மீள்மதிப்பிட்ட திட்டத்தின் செலவு $ 976 மில்லியன்) (ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் உறுதியளிக்கப்பட்ட கடன் தொகை - $ 539 மில்லியன்)</td><td>பலனடையும் மாவட்டங்கள்</td><td>அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், மாத்தளை</td></tr>
<tr><td colspan="2">நிதி வசதிகள் வழங்கப்படும் முறை</td><td>ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அரசும்</td><td>நீர்த்தேக்கத்தின் கொள்திறன்/ பயிர்ச் செறிவு</td><td>NCPCP - 190 MCM
NWPCP - 130 MCM
பண்படுத்த வேண்டிய நிலப்பரப்பு (எக்டர்)
வடமேற்கு மாகாண கால்வாய் திட்டம் - 13,000
வட மத்திய மாகாண கால்வாய் திட்டம் - 12,300
மினிபே இடதுகரை கால்வாய் புனரமைப்பு திட்டம் - 7,500</td></tr>
<tr><td rowspan="2">கருத்திட்ட காலப் பகுதி</td><td>முதல் நிலை ஒப்பந்த காலப் பகுதி</td><td>2015 - 2020</td><td rowspan="2">பலனடைவோர்</td><td rowspan="2">கட்டம் 1 – பயன்பெறும் மக்கள் தொகை
வடமேற்கு மாகாண கால்வாய் திட்டம் - 300,000
வட மத்திய மாகாண கால்வாய் திட்டம் - 700,000
மினிபே இடதுகரை கால்வாய் புனரமைப்பு திட்டம் - 62,000</td></tr>
<tr><td>கால நீடிப்பு</td><td>2020 - 2025 (ஜூன்)</td></tr>
</table>

2024 ஆம்ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா மில்லியன்)	28,460.00	**2024** ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	24,690.69
முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	118,858.00	முழு மொத்த பௌதீக விருத்தி	68.00%
2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• **கட்டுமானப் பொதிகளின் நிலை பின்வருமாறு** • நடப்பு ஒப்பந்தப் பேக்கேஜ்களில் 31 டிசம்பர் 2024 வரையிலான முன்னேற்றம் பின்வருமாறு, ➢ இடது கரை மற்றும் வலது கரை கால்வாய்களுக்கான நீர் கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகள் உட்பட மினிப் அணைக்கட்டை உயர்த்துதல் (MLBCRP-ICB-1) - ஒட்டுமொத்த முன்னேற்றம் - 100% ➢ நபடகஹவத்தவிலிருந்து மஹகித்துல நீர்த்தேக்க நுழைவாயில் சுரங்கப்பாதை வரை (5+250km முதல் 22+300km வரை) (NWPCP-ICB-2) பிரதான கால்வாயை நிர்மாணித்தல்.- 2024 இல் முன்னேற்றம் - 97%, ஒட்டுமொத்த முன்னேற்றம் - 99.73% ➢ மேல் எலஹெர கால்வாய், களுகங்கை - மொரகஹகந்த பரிமாற்ற கால்வாய் (KMTC) (0+100 கிமீ முதல் 08+830 கிமீ வரை) நிர்மாணித்தல் (0+100 கிமீ முதல் 08+830 கிமீ வரை) 8 கிமீ நீளமுள்ள இரண்டு சுரங்கங்கள் திறந்த கால்வாய் நீர்வழிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டமைப்புகள் (UEC-ICB-2) - 2024 இல் முன்னேற்றம் -79%, ஒட்டுமொத்த முன்னேற்றம் - 97.92% ➢ 27+509 கிமீ முதல் 55+600 கிமீ வரை மேல் எலஹெரா கால்வாய் கட்டுமானம் (UEC-ICB-2A) - 2024 இல் முன்னேற்றம் – 58%, ஒட்டுமொத்த முன்னேற்றம் - 47.68% ➢ ஆட்டோமேஷன் ஒப்பந்தத் தொகுப்பு MLBCRP-6 உட்பட மினிப் வலதுகரை கால்வாய்த் தலைமைப் பணிகளை மேம்படுத்துதல் - 2024 இல் முன்னேற்றம் – 29%, ஒட்டுமொத்த முன்னேற்றம் - 21.75% • பின்வரும் ஒப்பந்த தொகுப்பு நிறுத்தப்பட்டது, ➢ மஹாகித்துல இன்லெட் டன்னல், மஹாகித்துலா & மஹாகிருளா நீர்த்தேக்கங்கள், மஹாகிதுலா முதல் மகாகிருளா நீர்த்தேக்கம் வரையிலான ஊட்டக் கால்வாய் (NWPCP-ICB-1) ஆகியவற்றின் கட்டுமானம் - ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறன் ஒப்பந்தம் 26 மே 2023 முதல் நிறுத்தப்பட்டது. ➢ MLBCRP-ICB-1 ஒப்பந்தப் பேக்கேஜ் முழுமையடைந்தது, மேலும்		

	நிதிக் கொடுப்பனவுகளின் செயலாக்கம் தற்போது நடந்து வருகிறது. - 2024 இல் முன்னேற்றம் - 4%, ஒட்டுமொத்த முன்னேற்றம் - 100% • மகாவலி அமைப்புகளின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ➢ மகாவலி அமைப்பு B, C, D, G, H இல் 200 விவசாயிகளுக்கு 200 ஸ்மார்ட் விவசாயப் பொதிகள் ➢ மகாவலி அமைப்பு B, C, D, E, G, H, ஹுருலுவெவ & வளவ 1927 விவசாயிகளுக்கு 700,000kg கோழித் தீவனத்துடன் 100,000 ஒரு மாத வயதுடைய குஞ்சுகள்
2025 ஆம் ஆண்டிற்கென வேண்டப்பட்ட நிதியங்கள் (ரூபா மில்லியன்)	32,500.00
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• மகாவலி அமைப்பில் சேமிக்கப்பட்டுள்ள நீர் ஆதாரங்களை அதிகபட்சமாக பயன்படுத்துதல் • NCP இல் விவசாய உணவு முறைகளை மாற்றுவதற்கான வாய்ப்பு • பொருளாதார மறுமலர்ச்சிக்கான பங்களிப்பு • உற்பத்தி செய்யப்பட்ட அதிகரித்த உணவின் மதிப்பு • உணவு இறக்குமதியின் மதிப்பு மாற்றப்பட்டது • அதிகரித்த உணவு ஏற்றுமதியின் மதிப்பு • வீட்டு நீர் விநியோகத்திற்கான அணுகல் அதிகரித்தது • அதிகரித்த வேலை வாய்ப்புகள் • வனவிலங்குகளுக்கு தண்ணீர் கிடைப்பது அதிகரித்தது

மகாவலி வலயங்களில் பொருளாதார இடர்ப்பாடுகள் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள விவசாயிகளுக்கு வாழ்வாதார மேம்படுத்துகை நடவடிக்கைகளை செயற்படுத்துதல்

மகாவலி வலயம்	வினைத் திறன் மிக்க விவசாயத் தொகுதிகள் (SMART Packages) - 200		ஒரு மாத கால வயதுள்ள கோழிக் குஞ்சுகளுடன் (100,000) கூடிய கோழித் தீவனங்கள் (700,000 கிலோ கிராம்)			
	நிதி விருத்தி	பௌதீக விருத்தி	பலனாளிகளினது எண்ணிக்கை	நிதி விருத்தி	பௌதீக விருத்தி	
					குஞ்சுகள்	கோழி தீன் (kg)
பீ	100% ரூபா. 17.79	40 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 300	100% ரூபா. 21.84	15,000 - 100%	94,800kg - 100%
சீ	100% ரூபா. 8.88	20 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 294	100% ரூபா. 23.35	14,400 - 100%	105,000 kg - 100%
டீ	100% ரூபா. 22.21	50 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 300	90% ரூபா. 22.10.80	15,000 - 100%	96,000 kg - 91.5%
ஈ	தொடர்புபடாது	தொடர்புபடாது	விவசாயிகள் - 100	85% ரூபா. 7.08	5,000 - 100%	30,000 kg - 86%

மகாவலி வலயம்	வினைத் திறன் மிக்க விவசாயத் தொகுதிகள் (SMART Packages) - 200		ஒரு மாத கால வயதுள்ள கோழிக் குஞ்சுகளுடன் (100,000) கூடிய கோழித் தீவனங்கள் (700,000 கிலோ கிராம்)			
	நிதி விருத்தி	பௌதீக விருத்தி	பலனாளிகளினது எண்ணிக்கை	நிதி விருத்தி	பௌதீக விருத்தி	
					குஞ்சுகள்	கோழி தீன் (kg)
ஜீ	100% ரூபா. 8.88	20 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 100	100% ரூபா. 7.78	5,000 - 100%	35,000 kg -100%
எச்	100% ரூபா.17.77	40 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 297	100% ரூபா. 23.29	14,700 - 100%	104,000kg - 100%
ஹுருலு வாவி	100% ரூபா. 13.37	30 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 200	100% ரூபா. 15.53	10,000 - 100%	70,000kg - 100%
பீ	100% ரூபா. 17.77	40 தொகுதிகள் / விவசாயிகள் - 100%	விவசாயிகள் - 300	100% ரூபா. 21.84	13,600 - 100%	140,000kg - 100%

2. உமா ஓய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்

மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்லியன்)		89,748.00	பலனடைகின்ற மாவட்டங்கள்	பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை
நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற வழி முறை		அமெ. டொலர் 50 மில்லியன் நிதியம் - ஈரானிய அரசிடமிருந்தும், இலங்கை அரசிடமிருந்தும்	நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)	• புஹுல்பொல நீர்த்தேக்கம் - 0.63 மில்லியன் சதுர மீற்றர் • டயரபா நீர்த்தேக்கம் - 0.92 மில்லியன் சதுர மீற்றர் • பலனடைகின்ற பிரதேசங்கள் - காணப்படுகின்ற 1500 ஹெக்டயார் நிலங்கள் மற்றும் புதிதாக 4500 ஹெக்டயார் நிலங்கள்
கருத்திட்ட காலப் பகுதி	முதல் நிலை ஒப்பந்த காலப் பகுதி	2010 - 2025	பலனடைவோர்	6,000 குடும்பங்கள்
	கால நீடிப்பு	2010 - 2025		
நிதியங்கள் 2024 (ரூபா மில்லியன்)		4,500.00	2024 ஆம் ஆண்டின் நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	1,687.68

முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	82,007.21	மொத்த பௌதீக விருத்தி (%)	99.97%
2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	நீர்ப்பாசன அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கருத்திட்டத்தினது எஞ்சிய பணிகளை முன்னெடுக்கும் பொருட்டும், குறைகளை சரி செய்யும் பணிகள் தொடர்பாகவும் இலங்கை மகாவலி அதிகார சபைக்கும், இலங்கை மின்சார சபைக்கும் கையளித்தல்.		
2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா மில்லியன்)	1,920.00		
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற முழு மொத்தப் பலன்கள்	• 120 MW மின் பிறப்பாட்டத்தின் வாயிலாக வருடாந்தம் 230 GWh மின்சாரத்தை தேசிய மின் வலுத் தொகுதிக்கு ஒன்று சேர்த்தல் • மொனராகலை மாவட்டத்தில் நிலவுகின்ற 1500 ஹெக்டயார் காணிகள் மற்றும் புதிய 4500 ஹெக்டயார் நிலங்களுக்கு பாசன நீரை விநியோகித்தல் • பதுளை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களினது குடி நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 39 மில்லியன சதுர மீற்றர் (MCM) கொள்ளளவுள்ள நீரை விநியோகித்தல்		

3. மொரகஹகந்த களு கங்கை நீர்த்தேக்க கருத்திட்டம்

மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்லியன்)		120,700.00	பலனடைகின்ற மாவட்டங்கள்	மாத்தளை, பொலன்னருவை மற்றும் அனுராதபுரம்
நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற வழி முறை		இலங்கை குடியரசு, அபிவிருத்தி தொடர்பான சவூதி நிதியம், சர்வதேச அபிவிருத்தி தொடர்பான ஒபெக் நிதியம், அராபிய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான குவேட் நிதியம்	நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)	மொரகஹகந்த - 557.87 மில்லியன் சதுர மீற்றர் களு கங்கை - 248.00 மில்லியன் சதுர மீற்றர்
கருத்திட்ட காலப் பகுதி	முதல் நிலை ஒப்பந்த காலப் பகுதி	2007 ஜனவரி- 2015 மார்ச்	பலனடைவோர்	மாத்தளை, பொலன்னருவை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களினது குடி மக்கள்
	கால நீடிப்பு	2015 மார்ச் - 2025		
நிதியங்கள் 2024 (ரூபா மில்லியன்)		1,372.00	2024 ஆம் ஆண்டின் நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	793.57

முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	119,896.64	மொத்த பௌதீக விருத்தி (%)	99.90
2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்தி கருத்திட்டத்தினது காணிகளை சுவீகரிக்கும் பொருட்டு நட்ட ஈடுகளை செலுத்துதல். புதிய அபிவிருத்திப் பிரதேசங்களினது நீர்ப்பாசன காணிகளை மட்டப்படுத்துதல் மொரகஹகந்த புதிய அபிவிருத்தி பிரதேசத்தில் புதிய வதிவிடவாளர்களுக்கு குடி நீர் மற்றும் குடியியல் நீரை விநியோகித்தல்		
2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா மில்லியன்)	80.00		
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற முழு மொத்தப் பலன்கள்	• 557 மில்லியன் சதுர மீற்றர் கொள்ளளவுள்ள மொரகஹகந்த நீர்த்தேக்கம் • 248 மில்லியன் சருட மீற்றர் கொள்ளளவுள்ள களு கங்கை நீர்த்தேக்கம் • **மின் பிறப்பாக்கம் -** வருடாந்தம் 114.5 கிகா வொட் மணித்தியாலம் கொள் திறனுள்ள நீர் மின்னை உற்பத்தி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இதன் வாயிலாக வருடாந்தம் எரிபொருள் தொடர்பாக ஏற்படக் கூடிய ரூபா 1,545 மில்லியன் சேமிக்கப்படும். • பொதுப் பயன்பாடு தொடர்பாக - 465 கட்டிடங்கள் • 276 கி. மீ நீளமான வீதி வலையமைப்பு • 330 கி. மீ நீளமான கால்வாய் தொகுதி • 11 சிறு குளங்களை நிர்மாணித்தல் • 20 நடுத்தர அளவிலான குளங்களை நிர்மாணித்தல் • **விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக 5,000 ஹெக்டயார் அளவிலான மேலதிக நிலங்கள் ஒன்று சேர்க்கப்படுதல்.** • **நாட்டில் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல்.** • கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் இன்றளவில் 100% இலிருந்து 154% வரையான பயிர்ச் செறிவு 181% வரை அதிகரிக்கும். ஒரு ஹெக்டயாருக்கான நெர் விளைச்சலை அதிகரித்தல் உள்ளடங்களாக நேரடியாகப் பெறத் தக்க பலன களின் வாயிலாக வருடாந்தம் 123,000 தொன் மேலதிக விவசாய உற்பத்தி பெறப்படும். இதன் வாயிலாக கிடைக்கின்ற வருடாந்த நிகர விவசாயப் பலன் ரூபா 4,000 மில்லியனாகக் காணப்படுமென கணிப்பிடப்பட்டுள்ளது. • மாத்தளை, பொலன்னருவை, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு குடி நீர் மற்றும் கைத்தொழில் நீர் வசதிகளை ஏற்பாடு செய்தல். • **நன்னீர் மீனவத் துறை -** சாதாரண மீன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 4,700 தொன் ஆகக் காணப்படுமென மதிப்பிடப்பட்டிருப்பதுடன், வருடாந்த நிகரப் பலன் ரூபா 940 மில்லியனாகக் காணப்படுகின்றது. • **அதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் -** 650 நபர்களுக்கு		

	நேரடியாக கருத்திட்டத்தினுள் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். இரத்தினக் கல் மற்றும் தங்காபரண, ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் சுய தொழில் பயிற்சி போன்றவற்றை நடாத்துவதன் மூலம்/ஒழுங்கு செய்வதன் மூலம் அதிகளவில் இளைஞர் யுவதியர் பயிற்றுவிக்கப்படுவர். • **சுற்றுச் சூழல் சுற்றுலாத் துறை கருத்திட்டத்தை விருத்தி செய்தல் -** வஸ்கமுவ தேசிய சரணாலயம், மின்னேரியா தேசிய வனாந்திரம் மற்றும் ரிவர்ஸ்டன் போன்றவற்றை விருத்தி செய்வதன் மூலம் சுற்றுச் சூழல் நேயமிக்க சுற்றுலாத் துறை கருத்திட்டம் மேலுயர்த்தப்படும். • **வெள்ளப் பாதுகாப்பு -** சோமாவதி மற்றும் மனம்பிட்டிய பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பாதிப்புகளை கட்டுப்படுத்துதல்.

4. காலநிலை தாக்கங்களைத் தணிக்கும் பல் நோக்கு நிகழ்ச்சித் திட்ட பிரவேசிப்பு(CResMPA)

மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்லியன்)	26,970.00	பலனடைகின்ற மாவட்டங்கள்	இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களும்
நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற வழி முறை	IBRD - உலக வங்கி	**நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)**	56 மில்லியன் சதுர மீற்றர் 25,000 ஹெக்டயார் 35,000 குடும்பங்கள்
கருத்திட்ட காலப் பகுதி	6 வருடங்கள் (2021 - 2026)	பலனடைவோர்	•3.5 மில்லியன் குடித் தொகை - மேம்படுத்தப்பட்ட காலநிலை மற்றும் வெள்ளப் பெருக்கு அனர்த்த எச்சரிக்கைகளின் வாயிலாக •1,800,000 நபர்கள் - களனி ஆற்றுப் பள்ளத்தாக்கின் வெள்ளப் பெருக்கு மற்றும் காலநிலைக்கு முகங் கொடுக்க கூடிய திறன் தொடர்பான பல் வகை நீர் உட்கட்டமைப்பு வசதிகளின் வாயிலாக •35,000 குடும்பங்கள் - உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல்
நிதியங்கள் 2024 (ரூபா மில்லியன்)	7,019.00	**2024 ஆம் ஆண்டின் நிதி விருத்தி (ரூபா மில்லியன்)**	2,241.43

முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	2,918.86	மொத்த பௌதீக விருத்தி (%)	41.60
2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	அவதானிப்பு வலையமைப்பை விருத்தி செய்யும் பொருட்டு : • வளி மண்டலவியல் திணைக்களம் (DOM) : வழங்கப்பட்டுள்ள ஐதரசன் தோற்றுவாய் இயந்திரங்கள், தியடொலைட், PABX தொகுதிகள், IBL மென் பொருள், DOM தொடர்பாக அலுவலக தளபாடங்கள் மற்றும் தன்னியக்க மழை மானிகளை வழங்குதல். • நீர்ப்பாசன திணைக்களம் (ID) : நீரியல் மேற்பார்வை தொகுதியாக ஒருங்கிணைத்தல், ஆய்வு கூட மற்றும் அலுவலக வலாகங்களை மறு சீரமைப்பதன் வாயிலாக நீரியல் விருத்தி செய்கைகள், ஆய்வு கூட உபகரணங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உபகரணங்கள், ARC GIS மென் பொருள் மற்றும் 3 LIDAR டுரோன் விமானங்கள் கையளித்தல், 100 புதிய நீரியல் நிலையங்களை அடையாளம் காணும் பொருட்டு மதியுறை சேவைகளை கையளிக்கும் பொருட்டு ஒப்பந்தத்தை கையளித்தல். • நீர் வலுச் சக்தி (Hydraulic) ஆய்வு கூடங்களை விருத்தி செய்தல் : நீரியல் ஆய்வு கூடங்கள் மற்றும் அலுவலக மறு சீரமைப்புகள், மின்சாரத் தொகுதிகள் மற்றும் கட்டுப்பாட்டு பனல்களை மறு சீரமைத்தல், ஆய்வு கூட உபகரங்களை வழங்கும் பொருட்டு ஒப்பந்தத்தை கையளித்தல், பிரதேச ரீதியாக குறிப்பாக 19 தலைமை நீரியல் நிலையங்களாய் மறு சீரமைக்கும் பொருட்டு ஒப்பந்தத்தை கையளித்தல் • தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) : 330 தன்னியக்க மழை மானிகளை வழங்கும் பொருட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. அவசர முன்னெடுப்பு நிலையம் (EOC) நிலை நாட்டப்பட்டது. இதற்கென ICT உபகரணங்கள், கண்காட்சிப் பனல்கள் வழங்கப்பட்டன. நாட்டினுள் நிலவுகின்ற வாயுக்கள் தராதர நிலைகளை பரீட்சிக்கும் பொருட்டு தராதர தூண்டல் மிக்க 100 வலையமைப்புகளை நிலை நாட்டுவதற்குத் தேவையான உபகரணங்கள், அலுவலக தளபாடங்கள், gINT, ZodST20, Arc GIS, MATLAB, SarProz, GMS ground water pro, Arc Hydro நிலக் கீழ் நீர், எதிர்வு கூறல்கள் மற்றும் முன் அபாய எச்சரிக்கை தொடர்பாக VR SIMLAB, Pix4d மென் பொருட்களை வழங்குதல். • அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) : 5 KV மின் பிறப்பாக்கி இயந்திரங்கள், அனர்த்தங்களின் போது பாதுகாப்பு பெறும் குழாய்கள், மெகா போன், வாகன முகாமைத்துவம் தொடர்பாக, GPS வாகனங்களை பின் தொடரும் தொகுதியை வழங்குதல் மற்றும் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை நவீனமயப்படுத்தும் பொருட்டு வீதி		

	வரைபடங்களை தயாரிக்கும் பொருட்டு மதியுறை ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டுள்ளது. **உவர்ப் நீர்த் தடுப்பான் களை நிர்மாணித்தல் :** அம்பதலே களனி ஆற்றுக்குக் குறுக்காக நிரந்தர உவர் நீத் தடுப்பானொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு ஒப்பந்தக்காரரொருவரை இணைத்துக் கொள்வதற்குத் தேவையான திட்டமிடுகைகள் மற்றும் விலை மனு ஆவணங்களை நிறைவு படுத்தும் பொருட்டு CRIP இன் கீழ் விருத்தி செய்யப்பட்ட முதல் நிலை திட்டமிடல்களை மதிப்பீடு செய்து விருத்தி செய்யும் முகமாக EGIS பொறியியல் நிறுவனம் மதியுறை சேவைகள் தொடர்பாக இணைத்துக் கொள்ளப்பட்டது. இம் மதியுறை சேவையினால் இன்றளவிலும் தயாரிக்கப்பட்டுள்ள திட்டம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, முன்னெடுப்பு வினைத் திறன் மற்றும் நிர்மாணிப்பு செலவை வினைத் திறன் மிக்கதாக மேலுயர்த்தும் பொருட்டு காணப்படுகின்ற திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாறுபாடுகள் உள்ளடங்கிய அறிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. மதியுறை சேவைக்கென இணைத்துக் கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட ஆரம்ப TOR இன் கீழ் உள்ளடங்காத மேலதிகப் பணி விடயப் பரப்பு தொடர்பாக இம் முன் மொழிவு முன் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக பணி விடயப் பரப்பு தொடர்பான முன் மொழிவு உலக வங்கிக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்புகள் தொடர்பாக ஒப்பந்தக்காரரொருவரை இணைத்துக் கொள்ளும் பொருட்டு தொடர்புடைய கடிதக் கோப்புகள், அளவியல் பட்டியல்கள் மற்றும் விலை மனு ஆவணங்களினது பணிகளை பூர்த்தி செய்யும் பொருட்டான மேலதிக செயற் பணிகளுக்கென அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. **வீ ஒய நீர்த்தேக்கத்தின் அபிவிருத்தி :** தாழ் களனி பள்ளத்தாக்கு வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தும் முகமாகவும், துறைமுக நகருக்கும், கொழும்பு தலை நகருக்கும் குடி நீரை விநியோகிக்கும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் மழை காலப் பகுதியில் மழை நீரை தேக்க வைக்குக் பொருட்டு யட்டியந்தொட்ட வீ ஒய நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் பொருட்டு விபரமான திட்டமிடல்களை தயாரிக்கும் நோக்கில் ஈரானின் Mahab Ghodds நிறுவனத்தினது மதியுறை சேவைகள் பெறப்பட்டன. குறித்த மதியுறை நிறுவனத்தினால ஆரம்ப பணிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டு வரைவு படுத்தப்பட்ட ஆரம்ப அறிக்கை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு (Technical Review Committee) முன் வைக்கப்பட்டுள்ளது. வீ ஒய நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய ஆரம்ப

	அடையாளங்கள் காணக் கிடைப்பதால் மண் சரி அபாய நிலை தொடர்பாக மேலும் ஆராயும் பொருட்டு சிபாரிசுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதனடிப்படையில், விபரமான திட்டங்களின் வாயிலாக மண் சரிவு அபாய நிலையை குறைக்கும் பொருட்டு பொருத்தமான கட்டமைப்பு ரீதியான தீர்வுகளை அடையாளம் காணும் பொருட்டு NBRO இன் ஊடாக மண் சரிவு அபாய நிலை தொடர்பாக ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் பொருட்டு கையளிக்கப்பட்டுள்ளன. வீ ஒய நீர்த்தேக்கத்தினது நிர்மாணிப்புகள் காரணமாக பாதிப்புக்குள்ளாகக் கூடிய குடி மக்கள் தொடர்பாக அறிவூட்டல் கருத்திட்டமொன்றின் வாயிலாக அனைத்துத் தரப்பினரும் உள்ளடங்கக் கூடிய வகையாக தேசிய, மாவட்ட, பிரதேச ரீதியான மற்றும் கிராம சேவகர் ரீதியான அறிவூட்டுகை நிகழ்ச்சிகளையும், மதியுறை கூட்டத் தொடர்களும் இக் கருத்திட்டத்தின் வாயிலாக ஒழுங்கு செய்யப்பட்டன. இடம் பெயர்ந்த 203 குடும்பங்கள் தொடர்பாக மீள் குடியேற்ற செயலாற்றுகை திட்டமொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு ஒரு அடிப்படையை உறுவமைக்கக் கூடிய சுற்றுச் சூழல் மற்றும் சமூக ரீதியான தாக்கங்களை மதிப்பீடு செய்யும் (ESIA) ஆராய்ச்சி தொடர்பாக TOR தயாரிக்கப்பட்டது. இது தவிர, நிர்மாணிப்புகளுடன் தொடர்புடைய சுற்றுச் சூழல் தாக்கங்களை அடையாளம் காணும் பொருட்டு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) தயாரிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இம் மதிப்பீடுகளை முன்னெடுக்கும் பொருட்டு இரண்டு மதியுறை நிறுவனங்களை தொடர்புபடுத்திக் கொள்ளும் முகமாக TOR தயாரிக்கப்பட்டுள்ளது.
2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா மில்லியன்)	9,080.00
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற முழு மொத்தப் பலன்கள்	• 25 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட வகுதிகளின் கீழ் 373,723 நபர்கள் பலனடைந்துள்ளனர். • வெள்ளப் பெருக்கு மற்றும் கண்காணிப்பு அனர்த்த நிலையிலிருந்து 14,385 ஹெக்டயார் வயல் நிலங்கள் பாதுகாக்கப்படும். • தலைமை, நடுத்தர மற்றும் சிறு நீர்ப்பாசன முன் மொழிவுத் திட்டங்களின் வாயிலாக 18.9 கிலோ மீற்றர் கால்வாய்களை விருத்தி செய்தல். • களனி ஆற்றுப் படுக்கையினது வருடாந்த சாதாரண வெள்ளப் பெருக்கு அழிவுகளை குறைத்தல்.

கருத்திட்ட நோக்கங்களினது மீள் நோக்கமிடுகை (Repurposing) செயற்பாட்டின் கீழ் இயங்குகின்ற பிரதானமான, நடுத்தர அளவிலான மற்றும் சிறு நீர்ப்பாசனக் கருத்திட்டங்களினது துரித மற்றும் அத்தியாவசியமான மறு சீரமைப்புப் பணிகளினது விருத்தி - 2024

மாவட்டங்கள்	அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	2024 க்கான திட்டங்களின் எண்ணிக்கை	2024 ஆம்ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா)	விருத்தி	
				பௌதீக (%)	நிதி (%)
அம்பாறை	62	54	433.01	73.30%	103.28
அனுராதபுரம்	48	46	245.77	82.50%	83.09
பதுளை	50	42	133.27	89.29%	47.90
மட்டக்களப்பு	26	25	276.21	89.60%	157.65
கொழும்பு	49	46	131.13	78.91%	33.70
மாத்தறை	61	38	74.90	57.11%	19.25
காலி	43	24	51.97	50.21%	17.47
கம்பஹா	334	172	407.96	36.63%	44.17
அம்பாந்தோட்டை	14	11	27.77	95.64%	12.66
களுத்துறை	17	12	46.05	86.42%	15.58
கண்டி	13	8	35.16	65.63%	13.24
கேகாலை	31	25	36.55	80.60%	16.89
குருநாகல்	47	36	133.84	87.83%	47.73
மன்னார்	49	49	302.79	95.31%	159.43
மாத்தளை	60	43	167.16	76.93%	45.15
மொனராகலை	30	30	134.99	93.47%	62.22
நுவரேலியா	18	13	88.99	85.38%	10.10
பொலன்னறுவை	12	7	68.09	32.14%	3.52
புத்தளம்	18	17	92.45	79.12%	11.94
ரத்தினபுரி	114	89	491.82	92.11%	157.69
திருகோணமலை	143	139	761.04	88.10%	314.05
வவுனியா	32	21	153.40	71.67%	49.03
கிளிநொச்சி	44	42	263.73	90.43%	150.02
முல்லைத்தீவு	69	53	209.73	73.68%	93.08
யாழ்ப்பானம்	59	38	187.35	94.74%	79.77
மொத்தம்	**1443**	**1080**	**4,955.12**	**75.51%**	**1,748.60**

5. ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP)

மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்லியன்)	20,308.70	பலனடைகின்ற மாவட்டங்கள்	அனைத்து மாவட்டங்களும்
நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற வழி முறை	உலக வங்கி மற்றும் இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)	பயிர்ச் செறிவு (ஹெக்டயார்) - 201,632
கருத்திட்ட காலப் பகுதி	2021 மே - 2026 ஒக்டோபர்	பலனடைவோர்	1,100,000
நிதியங்கள் 2024 (ரூபா மில்லியன்)	4,397.00	2024 ஆம் ஆண்டின் நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	3,011.05
முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	6,265.03	மொத்த பௌதீக விருத்தி (%)	71.00%
2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	நிதியங்கள் மற்றும் ஒப்பந்தப் பணிகள் பின்வருமாறு • பணிகள் (கால்வாய் மற்றும் அணைக்கட்டு மறு சீரமைப்பு) • பண்டங்கள் (Dam inspection machine) • மதியுறை சேவைகள் • மதியுறை சேவைகளற்ற (MIS முகாமைத்துவத் தகவல் தொகுதி) *** நீர்ப்பாசன திணைக்களத்தின் (ID) ஒப்பந்தப் பணிகள் - கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டு மறு சீரமைப்புப் பணிகள் முற்று முழுதாக - 10 வகுதிகள்** இன்றளவிலும் 6 வகுதிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 4 வகுதிகளினது நிர்மாணிப்புப் பணிகள் இன்றளவிலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. *** இலங்கை மகாவலி அதிகார சபையின் (MASL) ஒப்பந்தப் பணிகள் - கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளினது மறு சீரமைப்புப் பணிகள் - 09 வகுதிகள்** இன்றளவிலும் 5 வகுதிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 4 வகுதிகளினது நிர்மாணிப்புப் பணிகள் இன்றளவிலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. *** வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களம் (NPC) ஒப்பந்தப் பணிகள் - கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளினது மறு சீரமைப்புப் பணிகள் - 09 வகுதிகள்** இன்றளவிலும் 4 வகுதிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 3 வகுதிகளினது நிர்மாணிப்புப் பணிகள் இன்றளவிலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. 2 வகுதிகளினது பெறுகை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.		

	*** கிழக்கு மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களம் (EPC) ஒப்பந்தப் பணிகள் - கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளினது மறு சீரமைப்புப் பணிகள் - 10 வகுதிகள்** 07 வகுதிகளினது பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. *** நீர் வளங்கள் சபையின் (WRB) பணி ஒப்பந்தத்தின் கீழான நிலக் கீழ் நீர் முகாமைத்துவ அலகுகளை விஸ்தீரணப்படுத்தும் நடவடிக்கை - முழு மொத்தமாக 02 வகுதிகள்** 1 வகுதியினது பணிகள் செயற்படுத்துகை நிலையில் காணப்படுவதுடன், ஒரு வகுதி பெறுகை நிலையில் நிலவுகின்றது. ***10 மில்லியன் பெறுமதியான மறு சீரமைப்புப் பணிகள் - சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை மறு சீரமைக்கும் பணிகள் (SMIIRW) செயற்பாட்டின் கீழான மொத்த வகுதிகளின் எண்ணிக்கை - 782** இன்றளவில் 758 வகுதிகளினது பணிகள் இன்றளவில் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 24 வகுதிகளினது பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. *** மதியுறை சேவைகள் - முழு மொத்தமாக 20 வகுதிகள்** இன்றளவில் 9 வகுதிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 6 வகுதிகளினது நிர்மாணிப்புப் பணிகள் இன்றளவில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. 5 வகுதிகளினது பணிகள் பெறுகை நிலையில் நிலவுகின்றன. *** பண்ட ஒப்பந்தம் - முழு மொத்தமாக 15 வகுதிகள்** 5 வகுதிகளினது பணிகள் இன்றளவில் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், ஒரு வகுதி செயற்படுகை நிலையில் நிலவுகின்றன. 9 வகுதிகள் பெறுகை நிலையில் நிலவுகின்றன. *** மதியுறை சேவைகளற்ற - மொத்தமாக 4 வகுதிகள்** 2 வகுதிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 2 வகுதிகள் செயற்பாட்டு நிலையில் நிலவுகின்றன.
2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா மில்லியன்)	5,550.00
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற முழு மொத்தப் பலன்கள்	• அவதானம் மிக்க அணைக்கட்டுகளின் எண்ணிக்கையை 18 இலிருந்து 8 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் • நீர்ப்பாசன அல்லது வடிகாலமைப்புச் சேவைகளை வழங்குவதன் மூலம் புதிய / அபிவிருத்தியடைந்த பிரதேசங்களினது நிலப் பரப்பினளவை 110,827.86 ஹெக்டயார்கள் வரை விருத்தி செய்தல் • நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளினது மறு சீரமைப்புப் பணிகள் காரணமாக நேரடியாக பலன்கள் கிடைக்கப் பெறுகின்ற தனி நபர்களினது எண்ணிக்கையை 1,100,000 வரை அதிகரித்தல் இலக்காகக் காணப்படுகின்றது. • மறு சீரமைக்கப்பட்ட அணைக்கட்டுகளின் எண்ணிக்கை 18 ஆக இலக்கிடப்படுகின்றது. • மறு சீரமைக்கப்பட்ட கால்வாய்களின் எண்ணிக்கை 14 ஆக இலக்கிடப்படுகின்றது.

கருத்திட்ட நோக்கங்களினது மீள் நோக்கமிடுகை (Repurposing) செயற்பாட்டின் கீழ் இயங்குகின்ற பிரதானமான, நடுத்தர அளவிலான மற்றும் சிறு நீர்ப்பாசனக் கருத்திட்டங்களினது துரித மற்றும் அத்தியாவசியமான மறு சீரமைப்புப் பணிகளினது விருத்தி - 2024

மாவட்டங்கள்	அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	2024 க்கான திட்டங்களின் எண்ணிக்கை	2024 ஆம்ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா)	விருத்தி	
				பௌதீக (%)	நிதி (%)
அம்பாறை	70	70	217.50	100%	130.512
அனுராதபுரம்	51	51	145.00	100%	116.533
பதுளை	28	28	107.11	100%	64.717
மட்டக்களப்பு	37	37	136.98	100%	92.957
கொழும்பு	13	13	40.31	100%	7.143
மாத்தறை	18	18	40.31	100%	27.893
காலி	23	23	49.11	100%	20.578
கம்பஹா	19	19	80.52	100%	20.615
அம்பாந்தோட்டை	38	38	132.92	100%	89.279
களுத்துறை	8	8	80.52	100%	12.124
கண்டி	9	9	40.31	100%	30.086
கேகாலை	6	6	46.69	100%	11.845
குருநாகல்	21	21	76.56	100%	52.491
மன்னார்	26	26	120.83	100%	90.332
மாத்தளை	30	30	80.62	100%	64.913
மொனராகலை	79	79	283.52	100%	130.717
நுவரேலியா	17	17	80.52	100%	52.567
பொலன்னறுவை	88	88	320.55	100%	226.601
புத்தளம்	13	13	40.31	100%	33.814
ரத்தினபுரி	55	55	112.04	100%	129.772
திருகோணமலை	48	48	231.13	100%	163.021
வவுனியா	31	31	145.00	100%	116.096
கிளிநொச்சி	17	17	80.52	100%	38.126
முல்லைத்தீவு	8	8	40.31	100%	33.565
யாழ்ப்பானம்	29	29	170.81	100%	79.439
மொத்தம்	**782**	**782**	**2,900.00**	**100%**	**1835.74**

6. ஒருங்கிணைந்த பிரவேசிப்பு ஊடாக உலர் வலயத்தின் சிறு தோட்ட உரிமையாளர்கள் காலநிலை மாறுபாடுகள் மற்றும் பாதகமான நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறனைக் கட்டியெழுப்பும் நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (CRIWMP)

மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்லியன்)	12,940.00 (1 அமெ.டொ = ரூபா 250) அமெ.டொ 52.08 மில்லியன்	பலனடைகின்ற மாவட்டங்கள்	அனுராதபுரம், பொலன்னருவை, குருணாகலை, புத்தளம், வவுனியா, மன்னார், திருகோணமலை
நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற வழி முறை	பசுமை காலநிலை நிதியம் / இலங்கை அரசு - நிகர் நிதிப் பங்களிப்பு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)	சிறு நீர்ப்பாசனத் தொகுதிகள் - 325 ஹெக்டயார் - 5,000
கருத்திட்ட காலப் பகுதி	07 வருடங்கள் (2017 ஜூன் - 2024 ஜூன்)	பலனடைவோர்	1,950,374
நிதியங்கள் 2024 (ரூபா மில்லியன்)	2,531.00	2024 ஆம் ஆண்டின் நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	ரூபா 2304.90 மில்லியன் (நீர்ப்பாசன அமைச்சு) ரூபா 147.50 மில்லியன் (ஐக்கிய நாடுகளினது அபிவிருத்தி நிகழ்ச்சி) நவம்பர் மாதம் இறுதியளவில் மொத்தம் ரூபா 2452.40 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)	ரூபா 7,575.50 மில்லியன் (அமைச்சினால்) ரூபா 3,246.50 மில்லியன் (ஐக்கிய நாடுகளினது அபிவிருத்தி நிகழ்ச்சியின் மூலமான நேரடி செலவு) ரூபா 10,822.50 மில்லியன்	மொத்த பௌதீக விருத்தி (%)	93 %
2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	**நீர்ப்பாசன மறு சீரமைப்பு உள்ளடக்கத்தின் கீழ்,** • 2024 ஆம் ஆண்டில், 26 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளினது (VIS) மேல் ஆற்று விருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. • முன்னிய ஆண்டினது அபிவிருத்திப் பணிகள் ஆர்ம்பிக்கப்பட்ட 44 குளங்களும் உள்ளடங்களாக இவ் வருட கால கட்டத்தில் மேல் ஆற்று அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட குளங்களின் எண்ணிக்கை 49 ஆகக் காணப்பட்டது.		

	• 2024 ஆம் ஆண்டில் 43 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளினது (VIS) செயற்பாடுகளின் கீழ் ஆற்றின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட குளங்கள் உள்ளடங்களாக இவ் வருடத்தில் தாழ் ஆற்று அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட குளங்களின் எண்ணிக்கை 71 ஆகக் காணப்பட்டது. • சுற்றுச் சூழல் உரிமம் மற்றும் பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தும் முகமாக 316 கிராமிய நீர்ப்பாசன தொகுதிகள் சார்பான பாதுகாப்புப் பிரதேசங்கள் தொடர்பாக எல்லைகளை கோடிட்ட வண்ணம் சட்ட ரீதியாக அதிகாரமிக்கதாக்கும் பொருட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. • கருத்திட்ட செயற்படுத்துகைகளை வெளிக் காட்டுவதற்கு உதவும் முகமாக பரந்து பட்ட உலகலாவிய தரவுக் களஞ்சியமொன்று உறுவமைக்கப்பட்டுள்ளது. இதனது விருத்தியை அவதானிக்கும் பொருட்டும், பலனாளிகளை அடையாளம் காணும் பொருட்டு GPS இடவமைப்பு பயன்படுத்தப்படும். **காலநிலை நேயமிக்க விவசாய உள்ளடக்கத்தின் கீழ்,** • 13 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளினது (VIS) நீர் முகாமைத்துவ மாதிரியுறுக்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன், இதனுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பங்கள் உள்ளடங்குகின்றன. • ஒரு முக ஈர மற்றும் உலர் நீர் முகாமைத்துவ செயன் முறை (AWD); 644 விவசாயிகளுடன் குறைவடைகின்ற நீர் மட்டம் தொடர்பாக தூண்டல் மிக்க ஒளித் தொகுதி தொழில்நுட்ப மாற்றீட்டு நிகழ்ச்சி; 326 விவசாயிகளுடன் பரசூட் நெற் பயிர்ச் செய்கை; நிரல் நடுகை, நிலத் துண்டங்களை ஒன்றுபடுத்துதல் (1,275 நிலத் துண்டங்களிலிருந்து 360 நிலத் துண்டங்கள் வரை குறைத்தல்) 185.9 ஏக்கர் (75.3 ஹெக்டயார்) லேசர் மட்டப்படுத்துகை. • திருகோணமலை மாவட்டத்தின் மாத்திரம் விவசாயத் தொழில்நுட்ப பண்ணைகளை நிலை நாட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. **குடி நீர் உள்ளடக்கத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு கால கட்டத்தில்,** • அனைத்து பாடசாலைகளுக்கும் 2 மழை நீர் ஒன்று திரட்டல் தாங்கிகள் எனும் அடிப்படையில் 49 பாடசாலைகளுக்கு மழை நீர் ஒன்று திரட்டல் தாங்கிகளை பொருத்தும் பணிகள் நிறைவடைந்தன. • பாரியளவான 10 சுத்திகரிப்புத் தொகுதிகள் நிலை நாட்டப்படுகின்றன. 06 இனது பொருத்துகை பணிகள் நிறைவடைந்துள்ளன. முழு மொத்தமாக 80% ஆன பௌதீக விருத்தியுடன் கூடியதாகப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. • சிறு அளவிலான 28 சுத்திகரிப்புத் தொகுதிகளினது நிலை நாட்டுகை பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும் மேலதிகமாகக் 20 தொகுதிகளை நிலை நாட்டும் பணிகள் இன்றளவிலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. முழு மொத்தமாக 80% ஆன பௌதீக விருத்தி எய்தப் பெற்ற நிலையில் பணிகள்

	முன்னெடுக்கப்படுகின்றன. • வினைத் திறன் மிக்க நீர் பாதுகாபு உத்திகளை விருத்தி செய்த வண்ணம் 84 குடும்பங்களுக்கும், 19 பாடசாலைகளுக்கும் மழை நீர் ஒன்று திரட்டல் தாங்கிகளினது பராமரிப்பு தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது. **அனர்த்த தூண்டல் மற்றும் ஆயத்தப்படுத்துகை உள்ளடக்கத்தின் கீழ்,** • விவசாய ரீதியான இரு போகங்கள் தொடர்பாகவும் மாவட்ட காலநிலை மதியுறைத் தகவல்கள் மாவட்டங்கள் உள்ளடக்கிய மாவட்டத்துக்கு இசைவாக விருத்தி செய்யப்பட்டன • ஆழ் அளவீட்டு அளவியல் சார்பாக 53 உபகரணங்களும், 132 நீரோட்ட அளவீட்டுக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. • கருத்திட்டத்தின் வாயிலாக 250 நீர் கட்டுப்பாட்டாளர்கள் வெற்றிகரமாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். • கால நிலைக்கு முகங் கொடுக்கக் கூடிய நெர் பாதுகாப்பு மற்றும் பேணுகை திட்டங்கள் தொடர்பாகப் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் (TOT) நிகழ்ச்சியொன்றி 51 உத்தியோகத்தர்கள் சார்பாக நடாத்தப்பட்டது. • விவசாயக் காலநிலையியல் மதியுறை சேவைகள் 7,000 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. • வெள்ளப் பெருக்கு முகாமைத்துவம் தொடர்பாக ஏற்கப்பட்ட முன்னெடுப்பு செயன் ஒழுங்கு முறையை (SOPs) தயாரிக்கும் கருத்திட்டத்தினது ஒரு பகுதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா மில்லியன்)	ரூபா 1,000.00 மில்லியன்
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற முழு மொத்தப் பலன்கள்	• 325 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளை விருத்தி செய்தல் மற்றும் கால நிலை நற்புள்ள விவசாய நடவடிக்கைகளின் வாயிலாக இச் சிறு நீர்ப்பாசனத் தொகுதிகளில் நிலவுகின்ற 9,750 ஹெக்டயார் நிலத்தினது பயிர்ச் செறிவை 0.8 இலிருந்து 1.6 வரை அதிகரித்து இப் பிரதேசத்திலுள்ள குடி மக்களது கால நிலை மாற்றங்களுக்கு இயைபாக்கமடையும் திறனை மேலுயர்த்துதல் • 520,000 பலனாளிகளுக்கு விவசாயக் கால நிலை மதியுறைகளை கையளிப்பதன் ஊடாக கால நிலை மாற்றங்களுக்கு இயைபாக்கமடையும் திறனை மேலுயர்த்துதல் • காலநிலை மாற்றங்களை தாங்கக் கூடிய, நடுத்தர அளவிலான நீர் முகாமைத்துவத் தீர்வாக 07 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை செயற்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளை (70 பாரியளவான மற்றும் 16 சிறு அளவிலான) நிலை நாட்டுதல் மற்றும் மழை நீரை ஒன்று திரட்டும்ம் பொருட்டு 4,000 தாங்கிகளை நிலை நாட்டுதல், குடி நீர் முகாமைத்துவத் திட்டங்களை திட்டமிடுவதன் ஊடாக அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய குடிகளிலுள்ள 122,715 நபர்களுக்கு வருடம் முழுதும் பாதுகாப்பு மிக்க நீரை விநியோகித்தல் • வினைத் திறன் மிக்க கால நிலை மேற்பார்வை மதியுறைகளை

	பகிர்ந்தளித்தல், முன் அனர்த்த எச்சரிக்கை தொகுதிகளை வலுவூட்டுதல் மற்றும் அனர்த்தங்கள் தொடர்பாக தூண்டலைக் காட்டும் திறனை மேலுயர்த்துவதன் மூலம் வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சி அனர்த்த நிலைக்கு உள்ளாகக் கூடிய 450,000 குடி மக்களுக்கு அது தொடர்பாக இயைபாக்கமடையக் கூடிய திறனை மேலுயர்த்துதல்

7. இலங்கையில் நகல்ஸ் மலைத் தொடரின் நீரேந்து பிரதேசத்தில் அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய ஆற்றுப் படுக்கைகளில், நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் தாழ் ஆற்றுப் படுக்கைகளில் குடியேறியுள்ள விவசாயிகளினதும், விவசாயக் குடி மக்களினதும் காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறனை வலுவூட்டுதல் - (GCF நகல்ஸ் கருத்திட்டம்)

மதிப்பிடப்பட்ட செலவு (மி.ரூ.)	14,692.50 LKR Mn (300 LKR=1 USD) 48.975 USD Mn	**பலனடைகின்ற மாவட்டங்கள்**	மாத்தளை, கண்டி, அநுராதபுரம், குருநாகல், புத்தளம்
நிதி மூலங்கள்	பசுமை காலநிலை நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கம்	**நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)**	மலையக நீர்நிலை ஹெக்டயார் 166,254 நெற்பயிர் செய்த தழ்நிலங்கள் ஹெக்டயார் 122,150
கருத்திட்ட கால எல்லை	6 வருடங்கள் (2023 சனவரி - 2029)	**பலனடைவோர்**	ஆண் - 138,003 பெண் -130,640
நிதி ஒதுக்கீடு 2024 (மி.ரூ.)	1010.00 (மி.ரூ.)	**2024 ஆம் ஆண்டின் நிதி விருத்தி (ரூபா மில்லியன்)**	410.93
திரளுறு நிதி முன்னேற்றம் (மி.ரூ.)	437.39	**மொத்த பௌதீக விருத்தி (%)**	6%
2024 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள்	• ஓடையோரப் பாதுகாப்பு மற்றும் வீதிகளின் இரு பக்கத்திலுமுள்ள வடிகால் முகாமைத்துவம்-1% • கிராமிய குளங்கள், தொட்டிகள் மற்றும் நீர்ப்பாசன வலையமைப்பை புனரமைத்தல் மற்றும் நிறுவுதல்-2% • காடுகளில் மொசைக் நில வரைவுகளை மீள் நிறுவுதல் -2% • உயர் நீர் நிலைப் பகுதிகள் மற்றும் கீழ் நீர் நிலைப் பகுதிகள் இரண்டிலும் நீர்ப்பாசன நெல் அறுவடையை அதிகரித்தல். -1% • சிறிய காணி வைத்துள்ளவர்களின் உற்பத்தியின் நிலைத்தன்மையை வலுப்படுத்துதல்- 2%		

